செ.வெ.எண்:26 நாள்:20.01.17

ந.க.பிசி1/338/2017
நாள்.19.01.2017

மாவட்ட ஆட்சியரகம் (வளர்ச்சி)
கடலூர்.

## பத்திரிக்கைச் செய்தி

இந்திய அரசின் நிதி ஆயோக் (NITI Aayog) நிறுவனம் இந்தியாவின் 12-வது ஐந்தாண்டு திட்ட காலம் 31.03.2017 உடன் நிறைவு பெறவுள்ளதாகவும், இதனைத் தொடர்ந்து மாண்புமிகு பிரதமர் அவர்களால் பதினைந்து வருடங்களுக்குரிய பொதுமக்களின் பங்கேற்புடன் கூடிய புதிய செயல் திட்டம் வகுக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இந்த 15 ஆண்டுகால புதிய திட்டமிடல், மக்களின் பங்கேற்புடன் ஒவ்வொரு கிராம ஊராட்சிகளிலும் கல்வி, வேலைவாய்ப்பு, பொதுசுகாதாரம், தூய்மை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றில் முன்னுரிமை அடிப்படையில் நிறைவேற்றப்பட வேண்டிய தேவைகள் குறித்து பொதுமக்களின் கருத்தினை அறிந்து திட்டமிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனவே, இந்திய அரசின் ஒருமித்த வளர்ச்சி குறித்து பொதுமக்களின் கருத்துகளை அறிய 26.01.2017 அன்றைய 68-வது குடியரசுத் தினத்தன்று அனைத்து கிராம ஊராட்சிகளிலும் நடைபெறவுள்ள கிராம சபைக் கூட்டத்தில் பொதுமக்களை பெருந்திரளாக கலந்துக்கொள்ளச் செய்து அவர்களது கிராமத்தில் கல்வி, வேலைவாய்ப்பு, பொதுசுகாதாரம், தூய்மை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் போன்றவற்றில் தேவைப்படுகின்ற பணிகள்/திட்டகள் குறித்து கருத்து மற்றும் ஆலோசனைகளை கேட்டறியுமாறு நிதி ஆயோக் (NITI Aayog) தெரிவித்துள்ளது.

--2

மேலும் இக்கிராம சபைக் கூட்டத்தில் கல்வி, வேலைவாய்ப்பு, பொதுசுகாதாரம், தூய்மை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் நிறைவேற்றக் கூடிய துறை அலுவலர்கள் கலந்துக் கொள்ள உள்ளனர்.

எனவே 26.01.2017 அன்று நடைபெறவுள்ள கிராம சபைக் கூட்டத்தில் கிராம பொதுமக்கள் பெருமளவில் கலந்துக் கொண்டு தங்களது கிராமத்தில் கல்வி, வேலைவாய்ப்பு, பொதுசுகாதாரம், தூய்மை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் தேவை குறித்து விவாதித்து தீர்மானிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

19.1.2017

மாவட்ட ஆட்சித்தலைவர்
கடலூர் மாவட்டம்.

19/1/17

வெளியீடு:- செ.ம.தொ. அ.கடலூர்.